**செய்தி வெளியீடு எண் : 092** **நாள் : 13.01.2023**

## <u>செய்தி வெளியீடு</u>

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குடகனாறு அணையிலிருந்து வலது மற்றும் இடது பிரதான கால்வாய்களின் மூலம் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பாசன நிலங்களுக்கு 18.01.2023 முதல் 03.03.2023 வரை 45 நாட்களுக்கு 264.38 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், குடகனாறு அணைக்கு கீழ் ஆற்றில் அமைந்துள்ள அணைக்கட்டின் நிலத்தடி நீர் மட்டம் உயரவும் மற்றும் வலது பிரதான கால்வாய் பகுதிகளின் நிலத்தடி நீர் மட்டம் உயர ஆறு மற்றும் வலது பிரதான கால்வாய் மூலம் 04.03.2023 முதல் 10.03.2023 வரை 7 நாட்களுக்கு 60.77 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திண்டுக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 9000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in